மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது உயர்நிலைப் பள்ளிகள், துவக்கப் பள்ளிகளைப் பொருத்தவரையிலும், சட்டம் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதைக் கொண்டுவந்து வெற்றி பெற்ற பிறகு கல்லூரிகளைப் பொருத்த வரையில் ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்ன செய்யலாம், வயசான பையனுக்கு புத்திதான் சொல்லலாம்.

Special Chest Clinic in Stanely Hospital, Madras

* 41 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of beds attached to the Special Chest Clinic in Stanely Hospital, Madras;

(*b*) the strength of the personnel managing the same; and

(*c*) whether the same is found sufficient for the Clinic ?

சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் இருதய நோய் சிறப்புப் பிரிவு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் இருதய நோய் மருத்துவச் சிறப்புப் பிரிவில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(இ) இப்பிரிவில் பணி புரியும் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(உ) அப்பிரிவுக்கு இப்பணியாளர்கள் போதுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) பத்து.

(இ) ஐந்து.

(உ) ஆம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த 10 படுக்கைகளும் ஒரே இடத்தில் இருக்கின்றனவா அல்லது பல ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றனவா என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'செஸ்ட் கிளினிக்' என்பதற்காக ஒதுக்கப்பட்ட படுக்கைகள் ஸ்டான்லியில் இருக்கின்றன. அவர்கள் கேட்டிருப்பது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைத் தவிர வேறு இடங்களில் இது மாதிரி 'செஸ்ட் கிளினிக்' இருக்கிறதா என்று.

1973 நவம்பர் 22]

ராயப்பேட்டை மருத்துவமனை, கஸ்தூரிபாய் காந்தி ஆஸ்பத்திரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி, ஸ்டான்லி ஆஸ்பத்திரி என்ற இடங்களில் இத்தகைய அமைப்பு இருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, may I ask the Hon. Minister what is so special about the chest clinic?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஸ்பெஷல் செஸ்ட் கிளினிக் என்பது, சிறப்பாக டி.பி. சம்பந்தமான வியாதிக்கு மட்டுமல்லாமல் அதோடு கூட வேறு விதமான தொடர்பு கொண்ட வியாதிகளுக்கும் சிகிச்சை வழங்குவது. அதற்கான சிகிச்சை அளிக்கும் பகுதிக்கு ஒரு டாக்டர் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை ஆற்றுவதற்கென சென்னை மாநகரப் பொதுமக்களுக்கு மாநகராட்சி மன்றத்தைச் சார்ந்த ஆறு டாக்டர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அதோடு ஹெல்த் விசிட்டர்கள்—ஏனென்றால் டாமிசைல்டு சிகிச்சை வழங்குவதற்கு—இருந்தார்கள். மாநகராட்சி டாக்டர்களை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அந்தப் பணியெல்லாம் இப்போது அரசாங்க டாக்டர்கள் மூலமாகத் தான் நிறைவேற்றப்படுகிறது. ஆனால், ஹெல்த் விசிட்டர்கள் ஓரளவு இந்த அரசாங்க மருத்துவ மனைகளில் மாநகராட்சிப் பிரதிநிதிகளாக இருந்து பணியாற்றுகிறார்கள். அதையும் 'ப்ரொவின்ஷியலைஸ்' செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஏனென்றால், பரவலாக மக்களுக்கு டாமிசைல்டு சிகிச்சை வழங்குகிற அளவுக்கு ஒரு தொடர்பு ஏற்படுத்துகிற நோக்கத்துடன் இது செயல்படுகிறது.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, is this treatment not available in the other hospitals?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Mr. Chairman, Sir, we cannot expect the same type of treatment in every hospital and every dispensary because certain clinics and departments are specialising in certain respects.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, I am informed that there are ten beds in this clinic, but all these ten beds are not in one place and the beds have been provided in the various wards under the control of various people. So, there is no proper control and I have also been informed that about 17,500 old patients and about 1,750 new patients are being attended to. Will the Hon. Minister consider increasing the number of beds in the Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதற்கு முன்னர் இந்த ஸ்டான்லி மருத்துவ மனையின் செஸ்ட் கிளினிக்கில் பேராசிரியராக இருந்தவரே அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அவர் என்னைச் சந்தித்தபோது இந்த விவரங்களைச் சொல்லவில்லை. நண்பர் திரு. சுவாமிநாதனிடம் அந்தக் குறைகளைச் சொல்லியிருக்கக்கூடும். ஆனால் என்னைச் சந்தித்தபோது, அங்கே இந்த வசதிகள் இல்லையென்று சொல்லியிருந்தால், அவை பற்றி நான் கவனித்திருக்கக்கூடும். ஸ்டான்லி மருத்துவமனையைப் பொறுத்த வரையில், இடவசதியை இனிதான் விரிவுபடுத்த வேண்டும். இப்போது இருக்கிற இடவசதி மிக்க குறைவே ஆகும்.

Food Poisoning

* 42. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Health be pleased to state the total number of cases of food poisoning reported to the Government Hospitals in Madras, during the calendar year 1972, monthwise ?

உணவில் நச்சுக் கலப்பு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

1972 ஆம் ஆண்டில் (திங்கள் வாரியாக) உணவில் நச்சு கலந்ததனால் பாதிக்கப்பட்டவர்கள் மொத்தம் எத்தனை பேர் சென்னை, அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : A statement @ is placed on the table of the House.

Students belonging to the Vada Balija Community in Colleges

* 43. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) the number of students belonging to the Vada Balija Community that were granted scholarships in Colleges during 1971–72;

@ 207 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.